சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **30/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | உத்திராபதி |
| தந்தை பெயர் | : | சுந்தரராஜன் |
| கிராமம் | : | நன்னிலம் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| வயது | : | 63 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்பொழுது காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 05.02.2021ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக

பணிபுரிந்தபோது, திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்தவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பொன்னையன் மகன் நாகப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் ஆஜராகி, நிலைய குற்ற எண் 153/2021 ச/பி. 294 (b), 324, 506 (2) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC / ST (PoA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கானது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு ) சட்டத்தின் கீழான வழக்கு என்பதால், நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். மேற்படி நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையும், வாதியின் வாக்குமூலத்தை இணைத்து தஞ்சாவூர் முதலாவது மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் ஆவணங்களை உயரதிகாரிகளின் பார்வைக்கும் மற்றும் நிலைய கோப்பிற்கும் வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.02 18:03:04 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.